**பிப்ரவரி – 24**

# TNPSC துளிகள்

- தமிழ்நாடு மாநில ஆளுநர், கே. பிச்சுமணியை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக நியமித்துள்ளார். இவர் துணைவேந்தராகப் பதவியேற்ற நாளிலிருந்து மூன்று வருட காலத்திற்கு அப்பதவியில் இருப்பார்.
- தனது நீதிமன்ற அறையை தொடர்ச்சியான ரகசிய கண்காணிப்பு கேமராவின் கீழ் கொண்டு வந்த நாட்டின் முதலாவது நீதிபதியாக மதராஸ் உயர் நீதிமன்றத்தைச் சேர்ந்த என்.எம். சுப்பிரமணியம் உருவெடுத்துள்ளார்.
- பிப்ரவரி 20 அன்று அருணாச்சலப் பிரதேசம் மற்றும் மிசோரம் ஆகிய வடகிழக்கு மாநிலங்கள் தமது மாநில தினத்தைக் கொண்டாடின.
    - மிசோரம் மற்றும் அருணாச்சலப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் முறையே 32-வது மற்றும் 47-வது மாநில தினத்தைக் கொண்டாடின.
- பஞ்சாப் மாநில அரசானது ஜாலியன் வாலாபாக் படுகொலைக்காக பிரிட்டீஷ் அரசை மன்னிப்பு கேட்குமாறு கோரியுள்ளது.
    - பிரிட்டீஷ் அரசை மன்னிப்பு கேட்குமாறு கோருவதற்கான தீர்மானமானது பஞ்சாப் மாநில சட்டசபையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.
- தெற்கு மத்திய இரயில்வேயானது நெல்லூர் மற்றும் சென்னை ஆகிய நகரங்களுக்கிடையே புதிய மெய்ன் லைன் எலக்ட்ரிக் மல்டிபிள் யூனிட் (MEMU - Mainline Electric Multiple Unit) கொண்ட விரைவு இரயில் சேவையைத் தொடங்கியுள்ளது.
- உணவு பதப்படுத்தும் தொழிற்துறைக்கான மத்திய இணை அமைச்சர் சத்வி நிரஞ்சன் ஜோதி அகர்தலாவின் துலக்கோனா கிராமத்தில் சிகாரியா பெரும் உணவுப் பூங்காவைத் தொடங்கி வைத்தார்.
    - நாட்டின் 17-வது பெரும் உணவுப் பூங்கா (Mega Food Park) இதுவாகும். மேலும் திரிபுரா மாநிலத்தின் முதலாவது பெரும் உணவுப் பூங்கா இதுவாகும்.
- 4-வது இந்திய–ஆசியக் கருத்தரங்கு மற்றும் மாநாடானது மத்திய வணிக மற்றும் தொழிற்சாலைத் துறை அமைச்சர் சுரேஷ் பிரபுவால் புதுதில்லியில் தொடங்கி வைக்கப்பட்டது.
- ஆசியாவின் மிகப்பெரிய விமானக் கண்காட்சியான பெங்களுருவில் நடைபெறும் ஏரோ இந்தியா – 2019ல் அமெரிக்காவின் பாதுகாப்பு தளவாட உற்பத்தி நிறுவனமான லாக்ஹீடு மார்ட்டின் F-21 என்ற பல பணிகள் மேற்கொள்ளும் ஒரு வகை போர் விமானத்தை அறிமுகப்படுத்தியது.
    - இந்தியாவின் தனித்துவத் திட்டமான இந்தியாவில் தயாரிப்போம் திட்டத்தின் கீழ் டாட்டா மேம்படுத்தப்பட்ட அமைப்புகளுடன் இணைந்து லாக்ஹீடு மார்ட்டின் நிறுவனம் இந்த விமானத்தைத் தயாரிக்க இருக்கின்றது.
- 2019-ஆம் ஆண்டு பிப்ரவரி 12 அன்று மத்திய உணவு பதப்படுத்தும் தொழிற்துறை அமைச்சரான ஹர்சிம்ரத் கவுர் பாதல் ஆந்திரப் பிரதேசத்தின் மேற்கு கோதாவரி மாவட்டத்தின் துந்துரு கிராமத்தில் கோதாவரி பெரும் நீர் உணவுப் பூங்காவைத் தொடங்கி வைத்தார்.
    - இது மீன்கள் மற்றும் கடல்சார் பொருட்களைப் பதப்படுத்துவதற்கென்று பிரத்தியேகமாக தொடங்கப்பட்ட இந்தியாவின் முதலாவது பெரும் நீர் உணவுப்

பூங்காவாகும்.

- பருவநிலை மாற்றம், வனங்கள் வளத்தின் மேலாண்மை மற்றும் வனவிலங்கு உள்ளிட்ட பல்வேறு சுற்றுச்சூழல் பிரச்சனைகள் மீதான பணிகளுக்காக கனடாவின் பிரிட்டீஷ் கொலம்பியா பல்கலைக்கழகத்துடன் மத்திய அரசாங்கம் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- மத்திய பாதுகாப்புப் படையில் பணியாற்றும் அனைத்து வீரர்களும் பணியில் சேரும் போதும் அல்லது விடுப்பில் செல்லும் போதும் வணிகத்திற்காகப் பயன்படும் விமானங்களை இலவசமாக பயன்படுத்திக் கொள்ள முடிவு செய்துள்ளது.
    - தற்பொழுது வரை, இந்த வசதியானது ஆய்வாளர் அல்லது அதற்கு மேல் நிலைகளில் உள்ள அதிகாரிகளுக்கு மட்டுமே வழங்கப்பட்டு வந்தது.
- மேற்கு இந்தியத் தீவினைச் சேர்ந்த கிறிஸ் கெயில் மேற்கு இந்தியத் தீவுகள் மற்றும் இங்கிலாந்து ஆகிய அணிகளுக்கு இடையே நடைபெற்ற முதலாவது ஒருநாள் போட்டியின் போது சர்வதேச அளவில் 477 சிக்சர்களை அடித்து பாகிஸ்தான் அணியின் முன்னாள் வீரரான சாஹித் அப்ரிடியின் சாதனையை முறியடித்துள்ளார். சாஹித் அப்ரிடி 476 சிக்சர்கள் அடித்ததே இதுவரையில் சாதனையாக இருந்தது.
- ஆண்களுக்கான முதல் தர பிரீமியர் கிரிக்கெட் போட்டியில் முதலாவது பெண் நடுவர்களாகப் பணியாற்றவிருக்கின்ற எலோய்ஸ் செர்டியர் மற்றும் மேரி வால்டிரோன் ஆகிய இருவரும் வரலாற்றுச் சாதனை புரியவிருக்கின்றனர்.

# தமிழ்நாடு செய்திகள்

## புதிய வருவாய் வட்டங்கள்

- 2019-ஆம் ஆண்டு, பிப்ரவரி 19 அன்று தமிழ்நாடு முதல்வர் தமிழ்நாடு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறைக்கான புதிய வருவாய் வட்டங்களைத் தொடங்கி வைத்தார்.
- புதிதாக தொடங்கப்பட்ட வருவாய் வட்டங்கள் பின்வருமாறு
    - கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள திருவட்டார் மற்றும் கிள்ளியூர்.
    - விருதுநகரில் உள்ள வத்திராயிருப்பு
    - திண்டுக்கல்லில் உள்ள குஜிலியாம்பாறை
    - திருவள்ளூரில் உள்ள ஆர்.கே. பேட்டை

## ஒலிம்பிக் விளையாட்டுக்கான மையம்

- ஒலிம்பிக் விளையாட்டுக்கான மையங்களை மேம்படுத்துவதற்காக சென்னை மற்றும் அந்நகரத்தைச் சுற்றிலும் 3 வெவ்வேறு இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இதற்காக தமிழக அரசு ரூ.10 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கியுள்ளது.
    - மெரீனா கடற்கரையில் உள்ள பாய்மரப் போட்டிக்கான மையம்
    - கேளம்பாக்கம் – வண்டலூர் சாலையின் மீது அமைந்த மேலக்கோட்டையூரில் உள்ள குவாரியில் படகு சவாரி மற்றும் சிறு படகு சவாரி விளையாட்டுக்கான

மையம்

- துரைப்பாக்கத்தில் உள்ள பக்கிங்ஹாம் கால்வாயின் மீது 2.9 கிலோ மீட்டர் தூர படகுப் போட்டி




- ❖ இதற்கான இடங்களை அடையாளம் காணுதல் மற்றும் அதற்கான வசதிகளைப் பராமரித்தல் ஆகியவற்றை தமிழ்நாடு விளையாட்டு வளர்ச்சி ஆணையம் (Sports Development Authority of Tamil Nadu - SDAT) மேற்கொள்ள இருக்கிறது.

# தேசியச் செய்திகள்

## பாகிஸ்தானிற்கு செல்லும் நீர் நிறுத்தம்

- ❖ சிந்து நதி நீர் ஒப்பந்தத்தின் போது சிந்து நதிகளிலிருந்து பாகிஸ்தானிற்குச் செல்லும் நீரில் இந்தியாவின் பங்கினை நிறுத்த இந்திய அரசு முடிவு செய்துள்ளது.
- ❖ 1960-ஆம் ஆண்டில் கையெழுத்தான சிந்து நதி நீர் ஒப்பந்தத்தின்படி,
    - மேற்கு நதிகளான சிந்து, ஜீலம், செனாப் – பாகிஸ்தானிற்கும்,
    - கிழக்கு நதிகளான ராவி, பியாஸ், சட்லஜ் இந்தியாவிற்கும் அளிக்கப்பட்டிருந்தன.
- ❖ ராவி, பியாஸ், சட்லஜ் நதிகளிலிருந்து பாயும் நீரில் இந்தியாவின் பங்கு 33 மில்லியன் ஏக்கர் அடிகள் அளவுள்ள நிலத்திற்குப் பயன்படும்.
- ❖ இந்த நதிகளின் மீது மூன்று முக்கிய அணைகள் கட்டப்பட்ட பின்னர் ஏறத்தாழ 95 சதவிகித நீர் இந்திய நாட்டிற்கு பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது.
- ❖ ஏறத்தாழ 5 சதவிகித நீர் பாகிஸ்தானிற்குச் செல்லும்.

## அஸ்ஸாம் ரைபில்ஸ் சிறப்பு அதிகாரங்கள்

- ❖ அஸ்ஸாம், அருணாச்சலப் பிரதேசம், மணிப்பூர், நாகலாந்து மற்றும் மிசோரம் ஆகிய வடகிழக்கு மாநிலங்களில் எவர் ஒருவரையும் கைது செய்யவும் ஆணை இல்லாமல் எந்த ஒரு இடத்தையும் சோதனையிடவும் மத்திய அரசினால் அஸ்ஸாம் ரைபில்ஸ் வீரர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.
- ❖ "அஸ்ஸாம் ரைபில்ஸ் படையில் அதிகாரி நிலையில் உள்ளவர்கள் அல்லது அதற்கு இணையான கீழ்நிலையில் உள்ள அதிகாரிகளுக்கு" குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின்படி இந்த அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

- அஸ்ஸாம் ரைபில்ஸ் என்பது வடகிழக்கு மாநிலங்களில் செயல்படும் முதன்மையான கிளர்ச்சி எதிர்ப்புப் படையாகும்.
- மேலும் இது முக்கியமான இந்திய–மியான்மர் எல்லைப் பகுதியையும் பாதுகாக்கிறது.
- ஆயுதப் படைகள் (சிறப்பு அதிகாரங்கள்) சட்டமானது வடகிழக்கு மாநிலங்களின் சில பகுதிகளில் செயல்பாட்டில் உள்ளது. இச்சட்டம் இந்தப் பகுதியில் பணியாற்றும் இராணுவத்திற்கும் அதே போன்ற அதிகாரத்தை வழங்குகிறது.

### இந்திய முத்திரைத் தாள் சட்டம் 1899 – திருத்தங்கள்

- இந்திய முத்திரைத் தாள் சட்டம் 1899–ல் திருத்தங்களை மேற்கொள்ள இந்தியக் குடியரசுத் தலைவர் ஒப்புதல் வழங்கியுள்ளார்.
- இது முத்திரைத் தாள் கட்டணங்கள் விதித்தலின் அமைப்பை மிகவும் திறமாகவும் பொருத்தமாக இருக்குமாறு அமைக்கவும் உதவும். மேலும் இது வரி ஏய்ப்பைத் தடுக்கவும் உதவும்.
- நிதிச் சட்டம் 2019–ன் ஒரு பகுதியாக இந்திய முத்திரைத் தாள் சட்டம் 1899 ன் திருத்தம் அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும் இதற்கு பாராளுமன்றத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.
- இந்த திருத்தமானது ஒரே இடத்தில் ஒரே நிறுவனத்தால் பங்குச் சந்தைப் பொருட்கள் மீதான முத்திரைத் தாள் கட்டண வசூலிப்பு நிறுவனத்தை மாநிலங்கள் ஏற்படுத்துவதற்காக சட்டப்பூர்வ மற்றும் நிறுவன இயங்கமைப்பை உருவாக்கப் பரிந்துரைத்துள்ளது.

## சர்வதேசச் செய்திகள்

### இந்தியத் திருவிழா – நேபாளம்

- ஒரு மாத காலம் நடைபெறும் இந்தியத் திருவிழாவானது நேபாளத்தில் நடத்தப் பட்டுக் கொண்டிருக்கின்றது.
- இந்தத் திருவிழாவானது இந்தியக் கலாச்சார அமைச்சகத்தின் உதவியுடன் சுவாமி விவேகானந்தா கலாச்சார மையத்தினால் காத்மாண்டுவில் உள்ள இந்தியத் தூதரகத்தில் நடத்தப்பட்டது.
- இந்தத் திருவிழாவானது இந்தியா மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளுக்கிடையே நீடித்த மற்றும் பரஸ்பர புரிந்துணர்வை மேம்படுத்துவதற்காக கொண்டாடப்படுகிறது.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பச்செய்திகள்

### நீண்ட இலக்கு வரம்புடைய பீரங்கித் துப்பாக்கி – தனுஷ்

- 'தனுஷ்' வகையிலான 114 பீரங்கித் துப்பாக்கிகளை உற்பத்தி செய்வதற்கான அனுமதியை இந்திய இராணுவம் மற்றும் பாதுகாப்புத் துறை அமைச்சகத்திடமிருந்து இராணுவத் தொழிற்சாலை ஆணையம் (Ordnance Factory Board - OFB) பெற்றுள்ளது.


- இந்தியாவில் தயாரிக்கப்படும் முதலாவது நீண்ட இலக்கு வரம்புடைய பீரங்கித் துப்பாக்கி “தனுஷ்” ஆகும். இது “இந்தியாவில் தயாரிப்போம்” என்ற முன்னெடுப்பின் ஒரு மிகப்பெரிய வெற்றியாகும்.




- தனுஷ் வகையிலான பீரங்கித் துப்பாக்கியானது இயந்திரத்தனமான மற்றும் மின்னணு முறையில் முறையே வரம்பை அதிகரிக்குமாறும் துல்லியத் தன்மையை அதிகரிக்குமாறும் மேம்படுத்தப்பட்டுள்ளது.
- இதில் உள்ள சுய உந்து விசை அலகானது அதன் துப்பாக்கி சிறந்த முறையில் செயல்படவும் மிக எளிதாக மலைப் பிரதேசங்களில் தன்னகத்தே அதைப் பொருத்திக் கொள்ளவும் அனுமதிக்கிறது.

## முதல் டீசல் என்ஜினிலிருந்து மாறிய மின்சார இரயில் என்ஜின்

- வாரணாசியின் டீசல் என்ஜின் பணிமனையில் 10000 எச்.பி. டீசல் என்ஜினிலிருந்து மின்சார என்ஜினாக மாற்றப்பட்ட முதலாவது என்ஜினை பிரதமர் தொடங்கி வைத்தார்.




- பழைய என்ஜின்களின் மறுசீரமைப்பிற்குத் தேவைப்படும் நிதியில் பாதியளவு நிதி

மட்டுமே இந்த மாறுதலுக்குத் தேவைப்படுகின்றது. எனவே இந்த மாறுதலானது செலவினக் குறைத்தலை நிரூபித்துள்ளது.

❖ மேலும் இது சரக்கு இரயிலின் சராசரி வேகத்தை இரட்டிப்பாக்குவதற்காக இழுவை சக்தியை மேம்படுத்துவதுடன் சுற்றுச்சூழலுக்கு உகந்ததாகவும் உள்ளது.

# இதரச் செய்திகள்

## போர்ப்ஸ் இந்தியாவின் 30–ன் கீழ் 30

❖ வணிகத்தில் மிகச்சிறந்த சாதனைகளை மேற்கொண்டவர்களுக்கான வருடாந்திர “போர்ஸ் இந்தியா 30–ன் கீழ் 30” என்ற அறிக்கையின் 6-வது பதிப்பை போர்ப்ஸ் இந்தியா வெளியிட்டுள்ளது.

❖ 16 வகைகளில் கீழ்க்கண்ட 4 விரிவான தகுதிநிலை அடிப்படையில் சாதனையாளர்களை போர்ப்ஸ் தேர்ந்தெடுத்துள்ளது. அவையாவன

  - அவர்களது சாதனைகளின் தாக்கம்
  - அவர்கள் பணிபுரியும் சூழலில் ஏற்படும் சவால்களை எதிர்கொள்ளும் திறன்
  - அவர்களது வணிகத்தை அளவிடல் அல்லது பணித் திறன்
  - அவர்கள் அதிக காலம் சாதனையாளர்களாக இருப்பதற்கான திறன்

❖ புகழ்பெற்ற தடகள வீரரான ஹீமா தாஸ், கிரிக்கெட் வீராங்கனையான ஸ்மிரிதி மந்தானா மற்றும் வோக் எக்ஸ்பிரஸின் ஆயுஷ் அகர்வால் ஆகியோர் இந்த சாதனையாளர்கள் பட்டியலில் முதல் 30 இடங்களில் உள்ளனர்.

❖ இந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ள ஒரே நடிகர் விஜய் தேவரகொண்டா மட்டுமே ஆவார்.

- - - - - - - - - - - - - - -